சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்: 14.07.2025

PW2: ஜெயபிரகாஷ் த/பெ– சவுண்டு ராமலிங்கம்

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

1) எனது தகப்பனார் பெயர் சவுண்டு ராமலிங்கம். 1ம் வாதியின் கணவர் பாலசுப்பிரமணியன் மற்றும் நானும் உடன் பிறந்தவர்கள். எங்களுக்குள் பூர்வீக சொத்துக்களை பிரித்து கொண்டேமா என்றால் இல்லை. சொத்துக்களை பிரிக்கவில்லை ஆனால் நாங்கள் தனித்தனியாக விவசாயம் செய்து வருகிறோம். வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கில் கண்டுள்ள சொத்தின் சர்வே எண்கள் தெரியும். பிரதிவாதிகள் என் பக்கத்து வீட்டுக்காரர். எங்களது சொத்திற்கு எனது பெயரிலும், பாலசுப்பிரமணியன் பெயரில் கூட்டுப்பட்டா உண்டு. பயிர் அடங்கல் கணக்கும் கூட்டாக தான் உள்ளது. தாவா சொத்தான சர்வே எண்.1242ற்கு 3ம் பிரதிவாதி ராமர் பெயரில் பட்டா உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. சொத்துக்களை யார் அனுபவம் செய்கிறார்களோ அவர்கள் பெயரில் பட்டா மற்றும் வருவாய் ஆவணங்கள் கொடுப்பார்கள் என்றால் சரிதான்.

2) வாதிகள் பெயரில் தாவா சொத்திற்கு வருவாய் ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். எனது அண்ணனின் வாரிசுகளான வாதிகளுக்காக சாட்சியம் அளிக்கிறேன். அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, உண்மையை சொல்கிறேன். நான் பூர்வீகமாக பாறைப்பட்டியில் வசித்து வருகிறேன். சடையாண்டி தேவர் என்பவரை எனக்கு தெரியாது. சடையாண்டி தேவரின் மகன்கள் சீனிதேவர் மற்றும் ஈஸ்வர மூர்த்தி ஆகியோர்களை தெரியும். சீனித்தேவர் முதல் மனைவிக்கும், ஈஸ்வர மூர்த்தி 2ம் மனைவிக்கும் பிறந்தவர்கள்.

சீனித்தேவரின் மகன்கள் பொன்மலை மற்றும் ஆறுமுகம் என்றால் சரிதான்.

3) தாவா சொத்துக்கள் யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களை பொறுத்து ஏற்கனவே விருதுநகர், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் ஆறுமுகம் என்பவரை பார்த்துள்ளேன். அவர் வெளியூரில் உள்ளார், என்னுடன் பேசி கொள்வார். பாறைப்பட்டியில் அவர் இல்லை. நான் அனுபவம் செய்துவரும் நிலத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. வாதிகள் அனுபவம் செய்து வரும் சொத்தின் சர்வே எண் வாதிகள் கொடுத்த ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு தெரியும். எனது அண்ணனின் வாரிசுகளுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.